## 8.10 ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசுப் பணிக்கு கொண்டு வரப்பட்ட நாளான 01.06.81க்கு முன்னர் இறந்து போன ஆசிரியர்களின் வாரிசுதாரர்கட்கும், 01.04.74க்கு முன் இறந்த ஊராட்சி ஒன்றிய பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களில் வேலை வாய்ப்பு அளித்தல்

---

ஊரக வளர்ச்சி (5) துறை

அரசாணை (நிலை) எண். 763 நாள் : 29.9.1986

படிக்க :

1. அரசாணை (நிலை) எண் 888, ஊரக வளர்ச்சி & உள்ளாட்சித்துறை, நாள் 8.6.84
2. ஊரக வளர்ச்சித் துறை, இயக்குநர் கடித எண் ந.க 265921/84, நாள் 15.4.85

**ஆணை**

பார்வை ஒன்றில் கண்ட அரசாணையில் மிகக்குறைந்த அளவே உள்ள ஊராட்சி ஒன்றிய பணியிடங்களை கணக்கில் கொண்டும், ஊராட்சி ஒன்றியப் பணியாளர்களின் (ஆசிரியர்கள் உள்பட) வாரிசுதாரர்களையும் அவரவரது கல்வித்தகுதி, வயது முதலியவற்றை கருத்திற்கொண்டு, பணிக்காலத்தில் இறந்த அரசுப் பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு அரசுப் பணியிடங்களில் வேலைவாய்ப்பளிப்பதுபோல், தமிழ்நாடு தேர்வாணைக்குழுவின் உள்ளிட்ட எல்லைக்குட்பட்ட பணியிடங்களில் தேர்வாணைக்குழுவின் ஒப்புதலுடன் பணி அமர்த்தலாம் என ஆணை வெளியிடப்பட்டு உள்ளது.

2. ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசுப் பணிக்கு கொண்டுவரப்பட்ட நாளான 1.6.81க்கு முன்னர் இறந்த போன ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் வாரிசுதாரர்கட்கும், 8.6.84 நாளிட்ட ஊரக வளர்ச்சி & உள்ளாட்சித்துறையின் அரசு ஆணை எண் 888, வெளியிடு முன்னர் இறந்துபோன ஏனைய ஊராட்சி ஒன்றிய பணியாளர்களின் வாரிசுகட்கும், கருணை அடிப்படையில் தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் வரம்பிற்குட்பட்ட பணியிடங்களில் நியமனம் செய்யலாம் என்பதைக் குறித்து அரசு மறு பரிசிலனை செய்தது. மேற்கண்ட செயற்குறிப்பை நடைமுறைப்படுத்த விதிகளில் இடமில்லாததால், 1.6.81க்கு முன் அதாவது ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களை அரசு ஊழியர்களாக ஆக்குவதற்கு முன், பணியில் இருக்கும்போது இறந்த ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களின் வாரிசுதாரர்களுக்கும், 1.4.74க்கு முன் ஊராட்சி ஒன்றிய பணியாளர்களான காசாளர், இளநிலை உதவியாளர் தட்டச்சர், தலைமை எழுத்தர் போன்றவர்கள் பணியில் இருக்கும் பொழுது இறந்த அன்னாரின் வாரிசுதாரர்களுக்கும் கருணை அடிப்படையில் ஊராட்சி ஒன்றியப் பணியிடங்களில் தான் வேலைவாய்ப்பு அளிக்க இயலும் என ஆணையிடுகிறது. இவ்வாணை வெளியிடப்படும் நாளிலிருந்து அமலுக்கு வரும்.

3. இவ்வாணை வேலைவாய்ப்பு மற்றும் பணி மற்றும் நிர்வாக சீர்திருத்தத்துறைகளின் ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது. அவைகளின் அலுவல் சார்பற்ற குறிப்பு எண் முறையே 16279/பி.1/86–1, நாள் 16.9.86 மற்றும் 84778/86–1, நாள் 25.9.86.

(ஆளுநரின் ஆணைப்படி)

**வி. சுந்தரம்**
ஆணையர் மற்றும் அரசு செயலாளர்